மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அரசு பரிசீலிக்கும்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : அமைச்சர் அவர்கள் கொடுத்த பதில் எங்கள் பகுதிக்குப் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தும் என்று கருதுகிறேன். கிருதுமாலின் மூலம் முதுகளத்தூர் பகுதிக்குத் தண்ணீர் வேண்டுமென்பது நீண்ட நாள் கோரிக்கை. கொந்தகைக் கண்மாய்த் திட்டத்தை நிறைவேற்றும்போதே முதுகளத்தூர் பகுதிக்கு பாசன வசதி செய்து தரும் வகையில் கிருதுமால் நதி மூலம் தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கொந்தகை கண்மாய்க்குத் தண்ணீர் விடுவதாலே மாண்புமிகு உறுப்பினர்க்கு என்ன வேதனை என்று எனக்குத் தெரியவில்லை. ஏற்கனவே வைகை ஆற்றுப் பாசன ஆயக்கட்டிலே, அந்த பேஸினிலே இருக்கக்கூடிய கண்மாய் அது. அதற்குத் தண்ணீர் சரியாக வருவதில்லை என்ற குறை இருக்கிறது, ஆகவே தண்ணீர் எடுத்துக் கொள்கிறோம். அதற்கு மேல் தண்ணீர் அதிகமாக இருந்தால் கிருதுமால் நதிக்கு இணைக்க வேண்டுமென்று திரு. சுப்பிரமணியம் அவர்கள் தெரிவித்தார்கள், அதைப்பற்றி பரிசீலிக்கலாம் என்று தெரிவித்திருக்கிறேன். முதுகளத்தூர் பற்றி என்னிடம் தகவல் இப்போது இல்லை.

திரு. என். லட்சுமிநாராயணன் : தலைவரவர்களே, கொந்தகை கண்மாயிலே விட்டதுபோக கிருதுமால் நதிக்கு எவ்வளவு உபரி நீர் கிடைக்கும் என்று நிபுணர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள்? அந்த கொந்தகை கண்மாய் மூலமாக அபிராம் கண்மாய்க்குத் தண்ணீர் பயன்படுத்த வகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தனிக் கேள்வி போட்டால் விவரம் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினக்கள் 752-ம் 753 ம் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

நூக்குமர ஏற்றுமதி

*754-வின திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1976-77-ம் ஆண்டு நமது மாநிலத்திலிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட நூக்குமரத்தின் மதிப்பு எவ்வளவு?

(ஆ) அதை அதிகப்படுத்த அரசு எடுத்திருக்கும் முயற்சி என்ன?

1978 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :

(அ) 1976-77 ஆம் ஆண்டில் நமது மாநிலத்திலுள்ள துறைமுகங்களிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட நூக்க மரத்தின் மதிப்பு ரூ. 8,92,228 ஆகும்.

(ஆ) தமிழகத்திலிருந்து நூக்க மர ஏற்றுமதியை அதிகப் படுத்தும் வாய்ப்பு இல்லை.

திரு. எஸ். கணேசன் : இந்த நூக்கு மரங்கள் தமிழகத்தில் எந்த மாவட்டத்திலே அதிகமாக இருக்கிறது? இப்படி ஏற்று மதி செய்யப்பட்ட நூக்கு மரத்தின் மூலமாக அரசுக்கு லாபம் வந்திருக்கிறதா? அரசுக்கு அதிக லாபம் வந்திருந்தால் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி மற்ற மாவட்டங்களிலும் நூக்குமரத்தை விளைவித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்த நூக்குமரங்கள் அதிகமாக மழை பெறும் காடுகளில் தான் விளைகின்றன. ஆகவே மழை அதிகம் பெறும் காடுகள் மாநிலத்தில் எந்த எந்த மாவட்டங்களில் இருக் கின்றதோ அந்த மாவட்டங்களில் எல்லாம் இந்த மரங்கள் வளர்க்கப்படுகின்றன. இப்படி விளைவிப்பதால் அரசுக்கு லாபம் ஏற்பட்டு இருக்கிறதா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அதற்கான விளக்கக் குறிப்பு என்னிடம் இல்லை.

(2) ஒழுங்குப் பிரச்சினை.

வினாப்பட்டியலில் உள்ள வரிசை எண்களில் உள்ள மாற்றம் குறித்து.

திரு. எஸ். ஆர். இராதா : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்தில் கொடுக்கப்பட்டி ருக்கிற இந்த வினாப் பட்டியலிலே முதல் பக்கத்தில் 752-வது எண்ணுள்ள வினா இருக்கிறது. அதற்குப் பின்னால் 758-வது எண் ணுள்ள வினாதான் இருக்கிறது. இடையில் உள்ள கேள்விகள் எல்லாம் இல்லை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சிறு தவறு நடந்திருக்கிறது. அதை ஒரு பெரிய தவறாக எடுத்துக் கொள்ளலாமா? பிரின்டிங் எர்ரர் என்பதைப் போல் அது சிலிப் எர்ரர்தான், பேப் பரிலே அதை இணைக்க மறந்திருக்கலாம். அதிலே ஒன்றும் ஒழுங் குப் பிரச்சினை இல்லை.

TRUTH ALONE TRIUMPHS